யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

## Term Examination, March – 2020

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2020) | விவசாய விஞ்ஞானம் | இரண்டு மணித்தியாலங்கள் |

➢ **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. விவசாயத் துறையில் தற்போது ஏற்படும் பிரச்சினைகளிற்கு தீர்வளிக்கக் கூடிய கூற்றுக்களை தெரிவு செய்க.

A. உழவர் சந்தைகளை நிறுவுவதன் மூலம் இடைத் தரகர்களின் தலையீட்டை குறைக்க முடியும்.

B. நகரமயமாதலினால் விவசாய நிலங்கள் குறைவடைவதை தடுத்தல்.

C. தொழிலாளர் பற்றாக்குறையை நீக்க ஊதியத்தை உயர்த்துதல்

D. உள்நாட்டில் விளைச்சல் கிடைக்கும் காலத்தில் இறக்குமதி தீர்வைகளை அதிகரித்தல்.

1. A,B,C  2. B,C,D  3. C,D,A
4. A,C,D  5. A,B,C,D

02. ஞாயிற்றுக் கதிர்ப்பை மிக வினைத்திறனுடன் அகத்துறிஞ்சுவது.

1. புன்னிலங்கள்  2. பனிக்கட்டிப் படைகள்  3. சதுப்பு நிலங்கள்
4. மணல் தரைகள்  5. காடுகள்

03. மத்தியநாட்டு ஈரவலயத்தில் அமைந்துள்ள பண்ணை ஒன்றின் சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி 3300mm இலும் அதிகமாகும். இந்தப் பண்ணை அடங்கும் விவசாயச் சூழலியல் வலயம்

1. IL1c ஆகும்  2. IM2b ஆகும்  3. WL1a ஆகும்
4. WU2b ஆகும்  5. WM1a ஆகும்

04. மண்ணினது B வலயத்தில் அடங்கியிருப்பது

1. கனிய வகையும் சிறிதளவு உக்கலும்  2. உக்கல்
3. குறையாக வானிலையாலழிந்த பாறை  4. மேல்மண்  5.உக்கலும் பரலும்

05. மண் இழையமைப்பை தீர்மானிக்கும் பரிசோதனையில் அமோனியம் ஐதரொட்சைட் பயன்படுத்துவதன் நோக்கமாவது

1. வெப்பநிலையை அதிகரிக்க
2. கனிப் பொருட் கூறுகளை தனிமைப்படுத்துவதற்கு
3. நுரைத்தலை கட்டுப்படுத்துவதற்கு
4. அடையலின் அளவைத் தீர்மானிப்பதற்கு
5. மண் கனிப் பொருட் கூறுகளிடையே நடைபெறும் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு

06. மூலத் தன்மையான மண் உருவாக்கத்தில் பெரிதும் பங்களிப்புச் செய்யும் அயன் வகை

1. $Fe^{2+}$ 2. $Fe^{3+}$ 3. $H^{+}$ 4. $Na^{+}$ 5. $Ca^{2+}$

07. ஒரு மாணவன் மண் மாதிரியில் இருந்து 100g மண்ணை எடுத்து ஈரமாக்கி உருட்டி ஒரு மோதிரம் போன்ற அமைப்பை ஆக்கினான். அவன் சோதித்துப் பார்த்த மண்ணின் இயல்பு

1. அமைப்பு 2. இழையமைப்பு 3. நிறம்
4. அடர்த்தி 5. எதிர்ப்புத்தன்மை

08. மண்ணிற்கு சேதனப் பசளை இடும் போது தாவரங்களிற்கு அவை கிடைப்பதற்கான எச் செயன்முறைக்குள்ளாகுதல் வேண்டும்.

1. தாழ்த்தல் 2. கனியவாக்கம் 3. ஒட்சியேற்றம்
4. நைதரசனிறக்கம் 5. கீலேற்றாக்கம்

09. தாவரங்களிற்கு இருப்பினதும் மக்னீசியத்தினதும் பயன்பாடாக அமைவது

1. பச்சையற் தொகுப்பிற்கு
2. இலைவாய்களின் செயற்பாட்டிற்கு
3. கனியுப்புக்களின் அகத்துறிஞ்சலுக்கு
4. ஓமோன் தொகுப்பிற்கு
5. மாப்பொருள் கொண்டு செல்லலிற்கு

10. பின்வரும் மூலகங்களுள் மண்ணில் பதியும் தன்மையுள்ள அசையும் மூலகம்

1. சிங்கு 2. மொலிப்தினம் 3. போரன்
4. பொசுபரசு 5. சல்பர்

11. பூச்சியப் பண்படுத்தல் தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு :

A. இரண்டாம் நிலைப் பண்படுத்தலானது பயிர் நாட்டப்படும் வரிசை அல்லது இடத்துக்கு மட்டும் வரையறுக்கப்படும்.

B. வித்துக்கள் முளைத்த பின் குறுகிய செயற்பாடு காலம் கொண்ட தேர்வுக்களை நாசினி பிரயோகிக்கபடும்

C. ஆரம்ப பண்படுத்தல் இதில் இடம்பெறாது

மேற்படி கூற்றுக்களில் உண்மையானவை

1. BC  2. AC  3. AB  4. ABC  5. B மட்டும்

12. முதற்பண்படுத்தல் உபகரணத்திற்கு உதாரணமாக அமைவது

1. முட்துகளாக்கி  2. வட்டத்தட்டுக் கலப்பை  3. சுழல்கலப்பை
4. மட்டமாக்கி  3. வட்டத்தட்டுத் துகளாக்கி

13. பொருத்தமான நீர்வடிப்பு முறைமை மூலமாக விவசாய மண்ணின் நீர்மட்டம் கட்டுப்படுத்தப்படும். இதன் நோக்கமாக அமைவது

1. மண்ணில் காற்று வாழ் நுண்ணங்கிகளின் குடித்தொகையை அதிகரித்தலாகும்.
2. மண் $P^{H}$ பெறுமானத்தை அதிகரித்தல்.
3. நோய் பீடைகளை கட்டுப்படுத்தல்
4. மண்ணில் உள்ள போசணைக் கூறுகளை அதிகரித்தல்
5. மண்ணை களக் கொள்வனவு நிலையில் பேணுதல்

14. துளி முறை நீர்ப்பாசனம் ஆனது

1. நோய்கள் இலகுவில் பரம்பலடையக் காரணமாகும்
2. மணல்பாங்கான மண் வகைகளிற்கு பொருத்தமற்றது
3. மரக்கறிப் பயிர்களிற்கு பொருத்தமானது
4. நுண் போசணைகளை இலைகளிற்கு பிரயோகிக்கப் பயன்படும்.
5. வேர் வலயத்திற்கு மட்டும் நீரை வழங்கும்.

15. நீர்ப்பாசன வினைத்திறன் மிகக் குறைவான கட்டுப்பட்ட மேற்பரப்பு நீர்ப்பாசனமாக அமைவது

1. வெள்ளப்படுத்தல்  2. வரம்புசால்  3. நிரல்பாசனம்
4. மோதிரபாசனம்  5. பேசின் பாசனம்

16. கிளைக்கோ பருப்புச் செயன்முறையின் போது

1. குளுக்கோசானது கிளைக்கோஜனாக மாற்றப்படும்.
2. பைருவேற்றானது எதைல் அல்கோலாக மாற்றப்படும்
3. ஒரு குளுக்கோசு இரண்டு பைருவேற்று மூலக்கூறுகளாக உடைக்கப்படும்
4. பைருவேற்றானது இலத்திரன் இடமாற்றும் தொகுதியினுள் புகும்.

5. காபன் சேர்வைகளின் பல்பகுதியமாக உடைக்கப்படும்.

17. பின்வருவனவற்றுள் இலைப் பரப்பளவை அளக்கும் முறை அல்லாதது
   1. நெய்யரி முறை   2. தட்டுமுறை
   3. தளமானிமுறை   4. தளபீட அளவைமுறை
   5. தாவர இலையின் நீள அகலத் தொடர்புமுறை

18. இழைய வளர்ப்பில் வியத்தமடையாத கலங்களின் உற்பத்தி
   1. புத்துயிர்ப்பு எனப்படும்
   2. வேர்கொள்ளல் எனப்படும்
   3. மூடுபடை உருவாக்கம் எனப்படும்
   4. மூலத் தாவரத்தாபிப்பு எனப்படும்
   5. புறச்சூழலுக்கு இணக்கப்படுத்தல் எனப்படும்.

19. பின்வருவனவற்றில் கிளையொட்டு முறை அல்லாதது.
   1. ஆப்பொட்டு   2. பக்க ஒட்டு   3. சவுக்குநா ஒட்டு
   4. முடியொட்டு   5. வில்லொட்டு

20. பதிவைத்தல் மூலம் கிடைக்கும் தாவரங்கள்
   1. பராமரிப்பது கடினம்
   2. அதிக விளைச்சலைத் தரும்
   3. விளைச்சல் உருவாக்க நீண்டகாலம் செல்லும்
   4. ஆழமான பரந்த வேர்த்தொகுதி கொண்ட ஒட்டுக்கட்டை தேவைப்படும்.
   5. வரட்சி போன்ற பாதகமான நிலைமைகளை சகித்து வளர முடியாதவையாக இருக்கும்.

21. வித்து முளைத்தலின் ஆரம்ப படிமுறை
   1. நொதியங்கள் தொழிற்படல்   2. வித்துறை வெடித்தல்
   3. நீர் உட்கொள்ளுகை   4. நாற்று வெளிப்படல்   5 வளர்ச்சி ஆரம்பித்தல்

22. இதரநுக சிவப்புநிற பூவைக் கொண்ட தாவரம் ஒன்று ஓரினநுக வெள்ளை நிறப்பூவை உடைய பின்னடைவான தாவரத்துடன் இனங்கலக்கப்பட்ட போது தோன்றக் கூடிய எச்சங்களின் தோற்றமைப்பு விகிதம் வெள்ளை சிவப்பு முறையே
   1. 2 : 1   2. 1 : 1   3. 3 : 1   4. 1 : 3   5. 1 : 2

23. பின்வருவனவற்றுள் நிரந்தர பாதுகாக்கப்பட்ட அமைப்பாக அமைவது
   1. பச்சைவீடு   2. தனிப்பயிர் மறைப்பு   3. குளிர்ச்சட்டகம்

4. வரிச்சுமனை 5. நீர்க்காப்பு அமைப்பு

24. மண்ணின்றிய பயர்ச் செய்கைக்காக திண்ம ஊடகம் ஒன்றை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இயல்பு அல்லாதது.

1. நெகிழ்தன்மை 2. நொருங்கு தன்மை 3. சிறப்பான வளியூட்டம்
4. நிறம் 5. தாங்கற் தன்மை

25. களை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானவை

A. தேவையற்ற இடத்தில் வளரும் எத் தாவரமும் களை ஆகும்.

B. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பயிர் செய் நிலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய என கருதப்படும் எத்தாவரமும் களை ஆகும்.

C. தாவர போசணை, நீர், இடவசதி, ஒளி என்பவற்றுக்கான பயிர்களுடன் போட்டியிடுபவை களை ஆகும்.

1. A,B 2. A,C 3. A மட்டும் 5.A ,B,C எல்லாம்

26. முன் சிறகுகள் வன் கவசங்களாக மாறியிருக்கும் பயிர்களிற்கு தீங்கு விளைவிக்கும் பூச்சி வருணம் பின்வருவனவற்றுள் எது?

1. கோலியொப்தெரா 2. டிப்தெரா 3. ஐசொப்தெரா
4. தைசனொப்ரெரா 5. லெபிடொப்தெரா

27. எரிவிரணம், பன்னிறப்படல், இலைச்சுருளல் போன்ற நோய் இயல்புகளை ஏற்படுத்தும் நோய்க் காரணியாவது

1. பற்றீரியா 2. பங்கசு 3. வைரசு
4. பைற்றோபிளாஸ்மா 5. றெமற்றோடு

28. சட்டத்தின் மூலமாக தாவர நோய்களை தவிர்ப்பது

1. பயிராக்கவியல் முறைக் கட்டுப்பாடாகும்
2. இரசாயமுறைக் கட்டுப்பாடாகும்
3. தாவரத் தடுப்பாகும் (மண்டபப்படுத்தல்)
4. உயிரியல் முறைக் கட்டுப்பாடாகும்
5. நோயெதிர்ப்பு தன்மையாகும்.

29. குறைவான நச்சுத் தன்மையுள்ள ஐ ஆம் வகைப் பீடை கொல்லிப் போத்தலின் பெயர்ச் சுட்டியின் கீழ்ப் பகுதியின் நிறம்

1. நீலம் 2. செம்மஞ்சள் 3. சிவப்பு
4. பச்சை 5. ஊதா

30. அமிலத் தன்மை குறைவான உணவுகள் என வகைப்படுத்தத்தக்க உணவுக் கூட்டம்.

1. மாம்பழம், முருங்கைக்காய்
2. கடலை, தக்காளி
3. தோடம்பழம், சூப்
4. இறைச்சி, முட்டை
5. ஊறுகாய், பயிற்றை

31. நொதியஞ் சாராத கபில நிறமாதல் தாக்கத்தின் விளைவு

1. விசுக்கோத்து பொற்கபில நிறமாதல்
2. வெட்டிய அப்பிள் துண்டு கபிலமாதல்
3. முந்திரிகை வற்றல் அவற்றின் குறித்த நிறத்தைப் பெறுதல்
4. தேயிலை கறுப்பாதல்
5. வாழைப் பொத்தி வெட்டியவுடன் கறுப்பாதல்

32. பின்வரும் இலங்கை உணவு தரநிர்ணயம் தொடர்பான கூற்றுக்களில் சரியாவை

A. இலங்கையின் உணவுத்தர நிர்ணயம் எல்லாம் கட்டாயமானவை அல்ல
B. இலங்கை தரநிர்ணய நிறுவனம் SLS ஐ உருவாக்கி செயற்படுத்துவதற்கு பொறுப்பான நிறுவனங்களுள் ஒன்றாகும்.
C. இலங்கையில் சில உணவுத்தர நிர்ணயங்கள் ஒழுங்குவிதிகளாக கருதப்படுகின்றன

1. A,C 2. A,B 3. B,C 4. B மட்டும் 5. A,B,C எல்லாம்

33. முதிர்ச்சி குறிகாட்டி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானவை

A. அறுடைக்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தை தீர்மானிப்பதற்கு முதிர்ச்சிக் குறிகாட்டி பயன்படுத்தப்படும்.
B. தன்னீர்ப்பு, மென்மையான தன்மை மற்றும் விறைப்பான தன்மை ஆகியன சிறந்த முதிர்ச்சிக் குறிகாட்டிகளாகும்.
C. பொருத்தமான முதிர்ச்சிச் சந்தர்ப்பத்தில் அறுவடை செய்வதன் மூலம் உச்ச விளைச்சலை பெறலாம்.

1. A,B 2. B,C 3. A,C 4. A மட்டும் 5. A,B,C எல்லாம்

34. எல்லை உச்சமல்லாத கூட்டத்தில் அடங்கும் பழவகை பின்வருவனவற்றுள் எது?

1. ஆணைக்கொய்யா
2. மா
3. மரமுந்திரிகை
4. பலா
5. வாழை

35. இலங்கையின் விலங்கு வளர்ப்பு வலயம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1. மலைநாட்டு வலயம்
2. தாழ்நாட்டு ஈரவலயம்
3. இடைவலயம்
4. தாழ்நாட்டு உலர் வலயம்
5. யாழ்தீபகற்பம்

36. உணவில் உள்ள நீரும் கனியுப்புகளும் மீள உறிஞ்சப்படும் சமிபாட்டுத் தொகுதியின் அங்கம்

1. தொண்டை    2. அசையூண்வயிறு    3. சமிக்குமிரைப்பை
4. துந்தம்    5. சிறுகுடல்

37. இந்தியாவில் தோற்றம் பெற்ற மாடுகளின் இயல்பு பின்வருவனவற்றுள் எது

1. உயர் சூழல் வெப்பநிலையை சகிக்காது
2. திமில் நன்கு வளர்ந்துள்ளது
3. பால் உற்பத்தி உயர்வானது
4. உரோமங்கள் நீளமானவை
5. உடல் சார்பளவில் பெரியது

38. சாதாரண பாலுடன் ஒப்பிடுகையில் பின்வருவனவற்றுள் எது கடும்புப் பாலின் மட்டும் உள்ள இயல்பு

1. செறிவு குறைவு    2. புரத அடக்கம் குறைவு
3. இமியுனோ குளோபியூலின் காணப்படும்    4. வெண்ணிறமானது
5. கொழுப்பு சதவீதம் உயர்வு

39. பின்வருவனவற்றுள் மஞ்சள் சடலத்தினால் சுரக்கப்படும் ஓமோன்

1. புரொஜெஸ்ரரோன்    2. ஈஸ்ரஜன்    3. தெஸ்தெஸ்திரோன்
4. புடைப்புத்தூண்டி ஓமோன்    5. இலுற்றினேற்ற ஓமோன்

40. செயற்கை முறைச் சினைப்படுத்தலின் போது பசுக்களின் இனப் பெருக்கத் தொகுதியில் வித்துக்கள் இடப்படும் பகுதி

1. யோனிமடல்    2. கருப்பைக் கழுத்து    3. பலோப்பியன்குழாய்
4. சூலகம்    5. கருப்பை

41. புல்லிருந்து குழிகாப்புத்தீனைத் தயாரிக்கும் சென்முறையில் சரியான ஒழுங்குமுறை

1. புல்லை வெட்டுதல், குழியை நிரப்புதல், நீர்சேர்த்தல், மூடுதல்
2. புல்லை வெட்டுதல், வாடவிடல், கலத்தல், குழியை நிரப்புதல், மூடுதல்
3. புல்லை வெட்டுதல், உறையுடன் கலத்தல், குழியை நிரப்பல், மூடுதல்
4. குழியை நிரப்புதல், வளியிறுக்கமாக முத்திரையிடல், இறுக்குதல்
5. புல்லை வெட்டுதல், குழியை நிரப்புதல், இறுக்குதல், மூடுதல்

42. பின்வருவனவற்றுள் மூலதனத்தின் இயல்பாக கொள்ள முடியாதது

1. மனிதனால் உருவாக்கப்பட்டிருத்தல்
2. விளைதிறனைக் கொண்டிருத்தல்
3. நீண்டகால தன்மை கொண்டது
4. தேய்வுக்குட்படாது
5. பல்வேறு உற்பத்திச் செயன்முறைக்காகப் பயன்படுத்த முடிதல்

43. பொருளொன்றின் கேள்வியைப் பாதிக்கும் காரணியாவது
1. உள்ளீடுகளின் விலை
2. உற்பத்தி இலக்கு
3. நுகர்வோர் வருமானம்
4. போட்டிப்பண்டங்களின் விலை
5. மொத்த தேசிய உற்பத்தி

44. பின்வருவனவற்றுள் ஏகபோக சந்தையின் இயல்பாக அமைவது
1. பல உற்பத்தியாளர்களைக் கொண்டிருத்தல்
2. சந்தை நுழைவாயிலில் தடைகள் இல்லை
3. பண்டத்துக்கான பிரதியீடுகள் அற்றதாக இருத்தல்
4. சந்தையில் போட்டி விளம்பரங்கள் காணப்படல்
5. தொடர்ச்சியான இலாபம் காணப்படாது

45. மாட்டுப் பண்ணையொன்றின் வெளியீடுகளின் அளவு அதிகரிக்கச் சராசரி செலவு குறைவடைகின்றது. இந்நிலைமையில் எல்லைச் செலவு
1. அதிகரிக்கும்
2. குறையும்
3. மாறுபடும்
4. சராசரி செலவை விட கூடிய பெறுமானத்தைக் கொண்டிருக்கும்
5. சராசரிச் செலவை விட குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருக்கும்

46. கேள்வியின் அளவில் ஏற்படும் சதவீத மாற்றம் விலையில் ஏற்படும் சதவீத மாற்றத்தை விடக் குறைவாயின் அச்சந்தர்பத்தில் கேள்வி,
1. நெகிழ்ச்சியற்றதாகும்
2. நெகிழ்ச்சியுடையது
3. பூச்சிய நெகிழ்ச்சி
4. அலகு நெகிழ்ச்சி
5. பூரண நெகிழ்ச்சியுடையது

47. பேண்தகு விவசாயத்தின் குறிக்கோளாக அமையாததது
1. சூழல் சுகாதாரத்தைப் பாதுகாத்தல்
2. பொருளாதார ரீதியில் இலாபகரமான தன்மையைப் பேணல்
3. சமூக சமத்துவத்தை பேணல்
4. பொருளாதார சமத்துவத்தை பேணல்
5. கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்தல்

48. மானாவரிப் பயிர்ச் செய்கையின் போது வித்து / நாற்று நடுதல் எம் மாதத்தில் ஆரம்பிக்கும்

1. யூலை, ஆகஸ்ட் முதல் வாரம்
2. ஆகஸ்ட் இறுதிவாரம்
3. செம்ரெம்பர் முதல் வாரம்
4. ஒக்டோபர் மூன்றாம் வாரம்
5. டிசம்பர் நடுப்பகுதி

49. மிகை வெப்பமுடைய இடங்களில் பணியாற்றுவதனால் ஏற்படும் தாக்கம் அல்லாதது

1. சருமத் தடிப்புக்கள் ஏற்படல்
2. கரண்டைக் காலிகளில் தசைப்பிடிப்பு ஏற்படல்
3. சருமம் ஈரலிப்பாதல்
4. திசைகோள் அற்றுப் போதல்
5. மூச்சுத் திணறல்

50. பின்வருவனவற்றுள் காலநிலை மாற்றங்கள் உண்டாவதற்கான காரணமல்லாதது

1. உயிர்ச்சுவட்டு எரிபொருளின் தகனம்
2. காடுகளை அழித்தல்
3. கைத்தொழில் மயமாக்கம்
4. நகரத்தில் கழிவுப் பொருள் சேர்தல்
5. நோய் பீடைகள் பரவுதல்

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ***01*** | *4* | ***11*** | *2* | ***21*** | *3* | ***31*** | *1* | ***41*** | *3* |
| ***02*** | *5* | ***12*** | *2* | ***22*** | *2* | ***32*** | *1* | ***42*** | *4* |
| ***03*** | *5* | ***13*** | *1* | ***23*** | *1* | ***33*** | *5* | ***43*** | *3* |
| ***04*** | *1* | ***14*** | *5* | ***24*** | *4* | ***34*** | *3* | ***44*** | *3* |
| ***05*** | *2* | ***15*** | *5* | ***25*** | *5* | ***35*** | *4* | ***45*** | *5* |
| ***06*** | *4* | ***16*** | *3* | ***26*** | *1* | ***36*** | *3* | ***46*** | *1* |
| ***07*** | *2* | ***17*** | *4* | ***27*** | *3* | ***37*** | *2* | ***47*** | *5* |
| ***08*** | *2* | ***18*** | *3* | ***28*** | *3* | ***38*** | *3* | ***48*** | *4* |
| ***09*** | *1* | ***19*** | *3* | ***29*** | *1* | ***39*** | *1* | ***49*** | *5* |
| ***10*** | *4* | ***20*** | *5* | ***30*** | *4* | ***40*** | *2* | ***50*** | *5* |